# குருவிடம் விசுவாசம், குணம் பல தருவான் குகன்



சிவத்தமிழ் குகமணி தெ.தனபால்
ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் திருப்பள்ளியெழுச்சி ஆசிரியர்
**94449 58526.** Email:- thiruppalli@yahoo.com
www.pambanswamigal.org or pambanswamigal.net

சீடன் ஆனவன் தன் குருவிடம் மிகுந்த விசுவாசம் உடையவனாய் இருத்தல் வேண்டும். ஓர் அரசன் காட்டிற்கு வேட்டையாடச் சென்றான். அறியாப்பருவமுடைய அவன் மகனும் உடன் சென்றான். அரசன் வேட்டையாடுவதில் சிந்தையைச் செலுத்தியதால் அக்காட்டினுள்ளே அங்குமிங்குமாக ஓடி விலங்குகளை வேட்டையாடினான். தன் மகனை மறந்தான். அறியாச் சிறுவன் வழிதவறிக் காட்டுக்குள் எங்கோ ஒரு பக்கம் சென்றான். அங்கிருந்த வேடர்கள் அவனை அரசன் மகன் என்று அறியாமல் தம்மோடு சேர்த்து வளர்த்தனர். அவன் வேடர் போலவே கொலைத் தொழிலும், புலைப்புசிப்பும் உடையவனாயும், கல்வியும் ஒழுக்கமும் இல்லாதவனாயும் வளர்ந்தான். பின்பொருநாள் அரசன் அவனைக் கண்டு உடன் அழைத்து வந்து அவன் வேடன் அல்லன், அரசன் மகன் என்றும் உணர்த்தினான். அவனுக்கு முடிசூட்டி அரசாளச் செய்தான்.

அந்த அரசன் மகன் வழிதவறிச் சென்று வேடர்களிடம் அகப்பட்டு வேடர் போலலே வாழ்ந்தது போல் ஆன்மா இறைவழி செல்வதை விட்டு ஐந்து புலன்கள் என்னும் வேடர்களின் அகப்பட்டுத் தான் யார் என்று தெரியாமல் தீவினைகளைச் செய்து கொண்டு வாழ்கின்றது. அப்போது தக்க காலத்தில் தம் தலைவனாகிய இறைவனே குருவடிவில் வந்து ஆன்மாவின் உண்மை இயல்பை விளக்கி ஐம்புலன்களாகிய வேடர்களிடமிருந்து விலக்கி, இறைவனை நோக்கித் தவம் செய்யுமாறு நெறிப்படுத்துகின்றான். அவ்வாறு செய்தமையால் இதுவரை அன்னியமாய் இருந்த ஆன்மா இறையுடன் இரண்டறக் கலந்து அன்னிய மில்லாததாகி விட்டது. அதாவது முத்தியை அடைந்து விட்டது.

மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்பொறிகளில் தோன்றும் ஐந்து அறிவுகளினால் அலைப்புண்டு தன்னையும், தலைவனையும் அறியாமல் வருந்தும் உயிர்களுக்கு அதன் துன்பத்தினின்றும் விடுதலை அளித்து இன்புருவாயுள்ள தன்னுடன் சேர்த்துக் கொள்ளும் பொருட்டு, இதுகாறும் உள்நின்று உணர்த்திய இறைவன் குருவாய் வெளிப்பட்டு உபதேசம் புரிந்து அவ்வுயிரைத் தன் மீது அன்பு கொள்ளும்படி செய்து என்றும் தன்னுள் கலந்திருக்கும்படி செய்கின்றான் என்பதால் குருவாய் வந்து குணம் பல காட்டுபவன் குகனே ஆவான்.

குருவிடம் விசுவாசமாய் இருப்பது ஒரு சீடனின் கடமையாகும். குருவின் குறிப்பறிந்து செயல்படுபவனே சிறந்த சீடன் ஆவன். "குரு அருள் இன்றி அருள்வரல் இல்லை" என்பது அத்தியாச்சிரம சுத்தாத்துவித வைதிக சைவ சித்தாந்த ஞானபானு பாம்பன் ஸ்ரீமத் குமர குருதாச சுவாமிகளின் ஞான வாக்கியம். அடியேன் இயற்றிய ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் திருப்பள்ளியெழுச்சி பாடலில் முதல் வரியே "திருவருள் வேண்டுமாயின் குருவருள் வேண்டும்" என்று உணர்த்தியுள்ளேன். இந்த விருத்தத்தை பத்மஸ்ரீ T.H. வினாயக்ராம் (கடம் வித்வான்) மகன் மகேஷ் வினாயக்ராம் பாடியுள்ளார். இப்பாடலை தாங்கள் கேட்க விரும்பினால் மேற்கண்ட வலைத் தலத்தில் சென்று திருப்பள்ளியெழுச்சி என்ற தலைப்பினை கிளிக் செய்தால் தாங்களும் கேட்டு மனம் மகிழலாம்.

அறுபத்து மூன்று நாயன்மார்களுள் குரு விசுவாசத்திற்கு சிறந்த சான்றாக அடியார்களால் போற்றப்படுபவர் அப்பூதியடிகள் ஆவார். சமணர்கள் மூலம் அப்பருக்கு ஏற்பட்ட துன்பங்களையும் சிவனருளால் ஒன்றுமில்லாமல் செய்து, கல்லையே தெப்பமாகக் கொண்டு கடலில் பயணம் செய்து கரை ஏறிய பெருமையை என்னென்று சொல்வது!/ அவரைக் கண்ணால் பார்க்கமலே அவர் பெருமையைக் கேட்டு அவரைத் தம் குருவாக வணங்கி அளவற்ற விசுவாசத்துடன், தம்பிள்ளைகளுக்கும் அசையும் பொருள், அசையாப் பொருள் அனைத்திற்கும், அறச்சாலை, திருக்குளம், தண்ணீர்ப்பந்தல் போன்றவற்றிற்கும் தி... குரு

pdfMachine
A pdf writer that produces quality PDF files with ease!
Produce quality PDF files in seconds and preserve the integrity of your original documents. Compatible across nearly all Windows platforms, if you can print from a windows application you can use pdfMachine.
Get yours now!

விசுவாசத்திற்கு அப்பூதியடிகளினும் சிறந்த இன்னொருவரை நாம் தேட வேண்டியதில்லை அன்றோ? அவர் தவம் செய்யவில்லை. பஞ்சாக்கினித்தவம் செய்தாரில்லை. உண்ணா நோன்பு நோற்றாரில்லை. ஒன்று மட்டும் செய்தார்; திருநாவுக்கரசு எனும் பெயரைச் சொல்லியும் எழுதியும் வந்தார். அதனால் பெரும்பதம் பெற்றார். நாம் இவ்வுண்மையை அறிந்து நமது சற்குரு நாதராகிய அத்தியாச்சிரம சுத்தாத்துவித வைதிக சைவ சித்தாந்த ஞானபானு பாம்பன் ஸ்ரீமத் குமர குருதாச சுவாமிகளிடம் மிக்க விசுவாசம் உடையவர்களாய் வாழ்ந்து தொண்டு பல செய்து வரவேண்டும். செய்யத்தவறினால் குருவருள் கிடைப்பது மிகவும் அரிது. அதன் விளைவாகத் திருவருளும் கிடைப்பது அரிது என்பது ஆன்மீகப் பெரியோர்களின் கருத்து. இதனை திருமந்திரம் பின்வருமாறு கூறுகின்றது:–

தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமம் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவருள் சிந்தித்தல் தானே.

அத்தியாச்சிரம சுத்தாத்துவித வைதிக சைவ சித்தாந்த ஞானபானு பாம்பன் ஸ்ரீமத் குமர குருதாச சுவாமிகள் அருளிய திருவலங்கற்றிரட்டு முதற்கண்டத்தில் திருச் சிந்துபுரம் என்னும் பதிகத்தில்

பெற்றவரும் மறப்பார் பிறந்தார் மகரும் மறப்பார்
உற்றவளும் மறப்பாள் ஒரு காலமும் நீ மறவாய்
அற்றம் அறுத்து அருள்வோர் உனை அன்றி எவருளரே
தெற்றென ஆட்படுவார்க் கருள் சிந்து புரத்தானே....

போன்ற வரிகள் எல்லாம் சற்று ஆழ்ந்து சிந்திக்க வேண்டிய ஒன்றாகும். ஒருகாலத்தில் நம்மைப் பெற்ற தாய் தந்தையரும் மறப்பார். உடன் பிறந்தாரும் மறப்பார். நாம் பெற்ற மக்களும் மறப்பார். மனைவியும் மறப்பாள். ஆனால் ஒரு காலமும் நாம் தஞ்சம் அடைந்த முருகன் மறக்க மாட்டான். இரவு பகல் என்ற எல்லாக் காலத்திலும் காத்து வருவான். துன்பத்தை அறவே ஒழித்து இன்பத்தை அளித்து அருள் புரிவோர் உன்னை அன்றி முருகா! வேறு தெய்வம் உண்டோ? ஒருவரும் இல்லை அன்றோ? நல்ல அறிவோடு உனக்கு அடிமைப்படுவார்க்கு அருள்மாரி பொழியும் திருச்செந்தூரில் குடி கொண்டவனே! எனச் சுவாமிகள் உள்ளமும் உடம்பும் உருகக் கூறியுள்ளமையால் நாம் அவனை மறக்கலாகுமா? இமைப் பொழுதும் மறவாதிருந்தால் நமக்கு இம்மையில் கிடைத்தற்கரிய முத்தியல்லவா கிடைக்கும்!

**pdfMachine**
**A pdf writer that produces quality PDF files with ease!**
Produce quality PDF files in seconds and preserve the integrity of your original documents. Compatible across nearly all Windows platforms, if you can print from a windows application you can use pdfMachine.
Get yours now!

pdfMachine
A pdf writer that produces quality PDF files with ease!
Produce quality PDF files in seconds and preserve the integrity of your original documents. Compatible across nearly all Windows platforms, if you can print from a windows application you can use pdfMachine.
Get yours now!